# இறையியல் (பாடம் 2)

## கர்த்தரின் நாமங்கள்

"அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது" சங்கீதம் 111:9. தேவனுடைய நாமங்களெல்லாம் பொருள் மிக்கவையாகும். அவை அவரைக்குறித்த பல செய்திகளை நமக்கு போதிக்கின்றன. பழைய ஏற்பாட்டில் 3 முக்கியத்துவம் வாய்ந்த நாமங்களை நாம் காணலாம். "நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது. சங்கீதம் 124:8.

1. ஏல் அல்லது ஏலோஹீம்

"தேவன் சர்வத்தையும் ஆண்டு நடத்தும் வல்லமையுள்ளவர்" என்பது இதன் கருத்தாகும். வேதாகமத்தின் முதல் வசனத்திலேயே இந்த நாமம் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் மட்டும் 2500 தடவைகள் இப்பெயர் காணப்படுகிறது.

2. யாவே அல்லது யெகோவா

"இருக்கிறவராய் இருக்கின்றேன்" (யாத் 3:14) என்பது இதன் கருத்தாகும். இந்நாமத்தை யூதர்கள் உச்சரிக்கத் துணியவில்லை. அப்பயத்தின் காரணமாக உடன்படிக்கைக்குரிய இப்பெயரை உச்சரிப்பது எவ்வாறு என்று அறியாதிருந்தார்கள். "யாவே" சரியான பூர்வக உச்சரிப்பு என்பது பல ஆராய்ச்சியாளருடைய அபிப்பிராயமாகும். இந்த பெயர் கொண்ட தேவன் வாக்குமாறாதவர், தாம் செய்த உடன்படிக்கையை மீறாதவர். சில ஆங்கில மொழிபெயர்ப்புகளில் "யெகோவா" என்ற பெயரை பயன்படுத்த முயன்றும் அது சாதாரண மக்களுக்கு விளங்காத காரணத்தால் 'LORD' என்று ஆங்கிலத்திலும், தமிழில் தடித்த எழுத்தில் கர்த்தர் என்றும் எழுதியிருக்கிறது.

3. அடோனாய்

இது ஒரு கௌரவமான பட்டப்பெயராகும். இறைவன் எல்லா மனிதரையும் ஆளுகிற வல்லமையுள்ள ராஜா (ஆதி 15:2) என்பது இதன் கருத்தாகும். இதற்கு ஆண்டவர், எஜமான், கணவன் என்ற அர்த்தங்களும் உண்டு. (யோவான் 13:13, 2 கொரி 11:23) எபிரெய சொல்லான இதன் அர்த்தம் தந்தையின் உள்ளங்கொண்டவர் என்பதாகும். ஏசாயா 64:8

"ஏல்" என்னும் பதத்துடன் தொடர்புடைய நாமங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏல் | - | ஏலியோன் | - | ஆதி 14:18-20 | - | உன்னதமான தேவன் |
| ஏல் | - | ஷடாய் | - | யாத் 6:3 | - | சர்வ வல்லமையுள்ள தேவன் (ஆதி 17:1) |
| ஏல் | - | ஓலாம் | - | ஆதி 21:33 | - | சதாகாலமுள்ள தேவன் |
| ஏல் | - | றோய் | - | ஆதி 16:13 | - | என்னைக் காண்கிற தேவன் |
| இம்மானு | - | ஏல் | - | மத் 1:23 | - | தேவன் நம்மோடிருக்கிறார் |

"யெகோவா" என்னும் நாமத்துடன் தொடர்புடைய நாமங்கள்

1. யெகோவா – ஏலோஹீம் - கர்த்தர் நித்திய சிருஷ்டிகர் - ஆதி 1:26-28
2. யெகோவா – அடோனய் - கர்த்தரே ஆளுகை செய்கின்றவர் - ஆதி 15:1-3
3. யெகோவா – ரா.ஃபா - கர்த்தரே குணமாக்குபவர் - யாத் 15:26
4. யெகோவா – நிசி - கர்த்தர் என் ஜெயக்கொடியானவர் - யாத் 17:15
5. யெகோவா – ஷாலோம் - கர்த்தர் என் சமாதானம் - நியா 6:24
6. யெகோவா - ரூவா - கர்த்தரே என் மேய்ப்பர் - சங் 23:1
7. யெகோவா – ஸிட்கெனு - கர்த்தரே என் நீதி - எரே 23:6
8. யெகோவா – யீரே - கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் - ஆதி 22:8-14
9. யெகோவா - ஷம்மா - கர்த்தரே கூட இருக்கிறார் - எசே 48:35
10. யெகோவா – சப்போத் - கர்த்தர் சேனைகளின் தலைவர் - 1 சாமு 1:3
11. யெகோவா – ஏலோகேனு - உன் தேவனாகிய கர்த்தர் நானே - யாத் 20:2-7
12. யெகோவா – ஏலோகே - கர்த்தர் என் தேவனானவர் - சகரி 14:5
13. யெகோவா – ஏலோகினு - கர்த்தரே எங்கள் தேவனானவர் - சங் 95:6
14. யெகோவா – ஏலியோன் - கர்த்தரே உன்னதமான தேவன் - சங் 97:9
15. யெகோவா – ஓசேனு - கர்த்தரே உருவாக்குகிறவர் - சங் 95:6
16. யெகோவா – மெக்காதீஸ் - கர்த்தரே பரிசுத்தப்படுத்துகிறார் - லேவி 20:8

பிதா

இப்பெயரை இயேசுகிறிஸ்து ஓர் உரிமையோடு சொன்னார். இதன் அர்த்தம் சகலத்தையும் உண்டு பண்ணுபவர் அல்லது மனிதனின் சிருஷ்டிகர் என்பதாகும். (அப் 17:28)

ஆனால் இந்த உறவு இரட்சிப்புக்கு உத்தரவாதம் கொடுப்பதொன்றல்ல. தேவ ஆவியானவரால் புதிதாக பிறப்பவர்களே தேவனுடைய உண்மையான பிள்ளைகளாவர் (யோவான் 1:12,13)

இயேசு

இது இணையில்லாத இனிய நாமம். இந்த நாமத்தில் அதிகாரம் உண்டு. இறைவன் தன் மக்கள் தன்னை எவ்விதம் அறிந்துகொண்டு, தம்மோடு உறவாட வேண்டும் என்று அதிகார பூர்வமாக வழங்கிய தேவனின் அற்புத நாமம் இதுவே. (யோவான் 2:23) இந்த நாமத்தில் நாம் அவரை எந்த சூழ்நிலையிலும் அழைக்கலாம்.

இயேசுவின் நாமம்

1. நம் பாவங்களை மன்னிக்கும் நாமம் (1 யோவான் 2:12, அப்போஸ்தலர் 10:43)
2. நம்மை இரட்சிக்கும் நாமம் (அப்போஸ்தலர் 2:21)
3. நமக்கு தைரியத்தைத் தரும் நாமம் (அப் 9:27,29)
4. நமக்கு ஆரோக்கியத்தைத்தரும் நாமம் (மல் 1:11)
5. நம்மை தேவ பிள்ளைகளாக்கும் நாமம் (யோவான் 1:12)
6. நம்மை பரலோகத்திற்கு கொண்டு செல்லும் நாமம் (யோவான் 20:31)
7. நம்மை கெட்டுப்போகாமல் காக்கும் நாமம் (யோவான் 3:5)
8. நம்மை பெலப்படுத்தும் நாமம் (அப் 3:16)

மாத்திரமல்ல, நம்முடைய இயேசுகிறிஸ்து நாமம் அதிசயமானவர் (ஏசாயா 9:6) எதைக் கேட்டாலும் தருபவர். (யோவான் 14:13-14) பிசாசுகளைத் துரத்துபவர் (மாற்கு 9:38-41) மகத்துவமான காரியங்களை செய்பவர் (மல் 1:11) இந்த நாமமே உலகத்தின் எந்த நாமத்திற்கும் மேலான சிறந்த நாமம் (பிலி 2:8-11)

இறைவனின் தனி இயல்புகள்

இறைவனின் சில தன்மைகள் மனிதனோடு சம்பந்தப்படாதவைகளாக இருக்கின்றன. இதை இறைவனின் தன்னிகரற்றதன்மை என்று கூறலாம்.

1. அவர் நித்தியமானவர் (1 தீமோ 1:17, சங் 102:24,27, ஏசாயா 57:15)

சகலத்துக்கும் ஆரம்பமும், முடிவும் இருக்கும் போது, இறைவனுக்கு மட்டும் ஆரம்பம் இல்லை முடிவும் இல்லை என்பது அவரது தன்னிகரற்றதன்மையை எடுத்துக்காட்டுகிறது. “இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர், நான் அல்பாவும், ஓமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்” (வெளி 1:8) அவர் அநாதியாய் என்றென்றும் இருப்பவர் (சங் 90:2)

2. அவர் என்றும் மாறாதவர் (யாக் 1:17, சங் 33:1, எபி13:8, யாத் 3:14,15)

உலகத்தை பார்த்தாலும், அதில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை வரலாற்றை பார்த்தாலும் அவை எப்பொழுதும் மாறிக்கொண்டும், குறைந்துகொண்டும், அழிந்து கொண்டும் இருக்கின்றன. ஆனால் தேவனோ என்றும் மாறாதவர் (மல் 3:6, யாத் 3:14,15) அவர் மாறவேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில் அவர் சம்பூரணமானவர். அவருடைய ஞானம், அன்பு, அனாதி தீர்மானங்கள், வாக்குதத்தங்கள் ஒருபோதும் மாறாதவை (எண் 23:19, 1 சாமு 15:29) ஆங்காங்கு தேவன் மனம் மாறியதாய் திருமறை கூறுகிறது உண்மையே. (யாத் 32:14, யோனா 3:10). ஆனால் அதுவோ மனுமக்கள் எளிதாக விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் கூறப்பட்ட ஓர் எளிய மொழிநடையே தவிர வேறொன்றுமில்லை. அவரது மாறாத தன்மை வெறும் அர்த்தமற்றதும் கவலையீனமானதுமல்ல. இங்கே தேவனின் நிலையான தீர்மானம் என்னவெனில் நினிவே மக்களுக்கு நியாயத்தீர்ப்பை எச்சரிப்பின் மூலம் கொடுப்பதால் அவர்களை மனந்திருப்புவதேயாகும். அவர் எல்லாவற்றையும் அறிந்திருப்பதனால் தன்னுடைய திட்டங்களை மாற்றவேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படாது. “எங்கே தேவனுடைய முதல் நடவடிக்கை காரணமாக, மக்களின் நடவடிக்கை மாறியதோ, அங்கே தேவனின் நடவடிக்கையும் மாறியது.”

3. அவர் எல்லாம் வல்லவர் (யோபு 42:2, சங் 33:9, ரோமர் 11:36)

அண்டசராசரங்கள் யாவற்றையும் சிருஷ்டித்த தேவன் வல்லமையுள்ளவர். அவர் வார்த்தை வல்லமை பொருந்தியது. (ஆதி 1:3, சங் 33:6,9) ஒரு தீயசக்தியாலும் அவரை தடுக்க முடியாது. (சங் 115:3, 135:7, தானி 4:35, அப் 4:27,28) சகலமும் அவருக்கு கட்டுப்பட்டவையாகும் (உபா 3:24)

4. அவர் சர்வவியாபகர் (சங் 139:7-12, எரே 23:23)

கடவுள் எங்கும் இருக்கிறார் என்று கூறும்போது, அவர் இடத்தை நிரப்பும் ஒரு சடப்பொருளுமல்ல, பரப்பில் பரவும் நீராவியுமல்ல. அவர் முழுவதுமாய் எங்கும் இருக்கின்றார். தமது வல்லமையையும் தமது பராமரிப்பையும் எங்கே செலுத்த வேண்டுமோ அங்கெல்லாம்

தமது சித்தத்திற்கிணங்க அவர் ஒரு நொடிப்பொழுதில் செலுத்துகிறார். தேவன் எங்கும் இருக்கிறார் என கூறும்போது, அவர் எங்கும் வாசம் செய்கிறார். இறைவன் தூணிலும் இருப்பவர், துரும்பிலும் இருப்பார் என்ற கொள்கை சார்ந்த பல தெய்வ வணக்கத்திற்குரிய கொள்கைக்கு நாம் சென்றுவிடக்கூடாது.

தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24) அதனால் தேவனுடைய மகிமையின் பிம்பத்தை மனிதர் கண்டுள்ளனர். ஆனால் அவரை முகம் முகமாக ஒருவனும் கண்டதில்லை. (யாத் 33:20-23, எபி 1:3)

1. அவர் ஆவியாயிருக்கிறார்

தேவன் ஆவியாயிருக்கிறார். (யோவான் 4:24) என்று இயேசு சொல்லியிருக்கிறார். கிரேக்க மொழியில் article எதுவும் இல்லாமலிருப்பதனாலும் பெயர்ச் சொல்லான ஆவி, பெயருரிச்சொல்லாக (adjective) எடுத்துக் கொள்ளப்பட வேண்டியிருப்பதனாலும், ஆவி என்பது தேவனுடைய தன்மையை வெளிப்படுத்துகிறது.

- தேவன் ஆவியாயிருக்கிறார் என்னும்போது அவர் சடப்பொருளாகவும் மாம்சமாகவும் இல்லாமலிருக்கிறார். ஆவிக்கு எலும்பும், மாமிசமும் இராது என இயேசு தெளிவாகத் தெரிவித்துள்ளார். (லூக்கா 24:39) எனினும் அவருக்கு கைகள் (ஏசாயா 65:2, எபி 1:10) பாதங்கள் (ஆதி 3:8, சங்கீதம் 8:6) கண்கள் (1 இரா 8:29, 2 நாளா 16:9) காதுகள் (நெகே 1:6, சங்கீதம் 34:15) இருப்பதாக வேதம் கூறுகிறதே என நாம் கேட்கலாம். அவை மனிதர்கள் புரிந்து கொள்ளுவதற்காக மனுவுருவக (Anthropomorphic) மொழியில் எழுதப்பட்டவை என்பதை நாம் மறந்து விடக்கூடாது.
- தேவன் ஆவியாயிருப்பதனால் மனிதனுடைய கண்களுக்கு தெரியாதவராக இருக்கிறார். அவர் அதரிசனமான தேவனாயிருக்கிறார். (ரோமர் 1:20, கொலோ 1:15, 1 தீமோ 1:17) இதனால் தேவனை ஒருக்காலும் ஒருவனும் கண்டதில்லை. (யோவான் 1:18) அவர் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறார் (1 தீமோ 6:16) எனினும் மீட்கப்பட்டவர்களுக்கு அவரைக் காணும் பாக்கியம் ஒரு நாள் கிட்டும் (சங்கீதம் 17:15, மத்தேயு 5:8, எபிரெயர் 12:14, வெளி 22:4) கடவுளை காண்பது சாத்தியமாகக் கூடியதல்லவென்றால் சில வேதப்பகுதிகள் பக்தர்கள் தேவனைக் கண்டதாக தெரிவிக்கின்றதே என நாம் வினவலாம். (ஆதி 32:30, யாத் 3:6, எண் 12:6-8, உபா 34:10 ஏசாயா 6:1) இதற்கு Torrey என்பவர் பின்வருமாறு பதிலளிக்கின்றார். கண்ணாடியில் தன்னுடைய பிம்பத்தை ஒருவன் பார்க்கலாம். அதன் பின் நான் என் முகத்தைப் பார்த்தேன் என்றோ என் முகத்தைப் பார்க்கவில்லை என்றோ பதிலளிக்கலாம். இரண்டும் சரியான பதில்களே. எனவே தேவனுடைய மகிமையின் பிம்பத்தை மக்கள் கண்டிருக்கிறார்கள். ஆனால் அவரைக் கண்டதில்லை. (யாத் 33:21-23, எபி 1:3) அவரைக் காண்பவர்கள் உயிர்வாழ்வதரிது. (யாத் 33:20) பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய தூதனானவர் தெய்வத்தின் கட்புலனாகும் உருவமாகும் (ஆதி 16:7-14, 22:11-18, யாத் 3:2-5, நியா 6:11-23, 1 இராஜா 19:5-7, 2 இராஜா 19:35, ஆதி 18:13-33).
- அவர் ஆவியாயிருப்பதனால் ஜீவனுள்ளவராக இருக்கிறார். ஆவி ஜீவனைக் குறிப்பதாயுள்ளது. அவர் ஜீவனுள்ள தெய்வம் என அழைக்கப்பட்டுள்ளார். (யோவான் 3:10, 1 சாமு 17:26, சங் 84:2, மத் 16:16, 1 தெச 1:9). ஜீவனானது உணர்ச்சி, வல்லமை செயற்பாடு என்பவற்றை உள்ளடக்கியது. சகல உயிர்களின், மூலமாக (ஆதியாக)

இருப்பவர் அவரே (யோவான் 5:26, சங்கீதம் 36:9) தேவன் ஜீவனுள்ளவராயிருக்கையில் விக்கிரங்கள் ஜீவனற்றவைகளாக உள்ளன. (சங்கீதம் 115:3-9)

- அடுத்து தேவன் ஆவியாயிருப்பதனால் அவர் ஆள்தத்துவமுடைய நபராகவும் இருக்கிறார். அநேக தத்துவ ஞானிகள் அவர் ஆள்தத்துவமற்ற ஆவி என்று வாதிட்டாலும் ஆவியான ஒருவர் ஆள்தத்துவமற்றவராயிருக்க முடியாது என்பதை நமக்கு அறியத்தருவதாயுள்ள மானிட ஒப்புவமை இதற்கான ஆதாரமாயுள்ளது. ஆவியுடைய மனிதர்கள் ஆள்தத்துவமுடைய நபர்களாயிருப்பது போலவே ஆவியாகிய தேவனும் ஆள்தத்துவமுடைய நபராயிருக்கிறார். H.C.Thiessen சுட்டிக் காட்டியது போல, மானிட ஆவி ஆள்தத்துவமுடையதாயிருப்பதனால் தேவ ஆவியும் அத்தகையதாகவே இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர் மனிதனை விட தாழ்வானவராகவே இருப்பார். இதனாலேயே அவர் சுய உணர்வுடைய (யாத் 3:14, ஏசாயா 45:5, 1 கொரி 2:10) மன உறுதியுடைய (யோபு 23:13, ரோமர் 9:11, எபி 6:17) தேவனாகவும் இருக்கிறார். மட்டுமல்ல அவர் ஆள்தத்துவத்தின் உளவியல் கூறுகளையுடையவராகவும் இருக்கிறார். அறிவு (ஆதி 18:19, யாத் 3:7, அப் 15:18) உணர்வு (ஆதி 6:6, சங் 103:8-13, யோ 3:16) சித்தம் (ஆதி 3:15, சங் 115:3, யோ 6:38) என்பவைக்கும் அவருக்குண்டு. அத்தோடு அவர் பேசுபவராகவும் (ஆதி 1:3) பார்ப்பவராகவும் (11:5) செவிமடுப்பவராகவும் (சங் 94:9) மனஸ்தாபப்படுபவராகவும் (ஆதி 6:6) கோபமடைபவராகவும் (உபா 1:37) பொறாமைப்படுபவராகவும் (யாத் 20:5) இரக்கமுடையவராகவும் (சங் 111:4) இருப்பதனால் அவர் ஆள்தத்துவமுடைய நபர் என்பதை ஏற்றுக்கொள்ளக்கூடியதாயுள்ளது.

கேள்விகள்

1. “ஏல்” என்னும் பதத்துடன் தொடர்புடைய நாமங்களையும் அதின் தன்மைகளையும் வசன ஆதாரத்துடன் கூறுக?
2. “பிதா” என்கிற நாமத்தின் அர்த்தத்தையும், இந்த நாமத்தின் அடிப்படையில் இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளையும் எழுதுக?
3. “இயேசுவின் நாமம்” என்கிற கர்த்தரின் நாமத்திற்குரிய மகத்துவங்களைப் பற்றி இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளை வசன ஆதாரத்துடன் எழுதுக?
4. தேவனின் (இறைவனின்) தனி இயல்புகள் என்னென்ன என்பதை இப்பாடத்தில் கற்றுக் கொண்டதின் அடிப்படையில் வசன ஆதாரத்துடன் சற்று விளக்கமாக எழுதுக?